*8*

# புறக்கணிக்கப்படுதல், ஆனால் களிகூருதல்

## (மத்தேயு 5:10-12)

நான் ஒரு கூட்டத்தில் உரையாற்றி, மகிழ்ச்சியை விரும்பும் யாவரையும் அவர்களின் கைகளை உயர்த்தச் சொல்லிக் கேட்டுக் கொண்டால், அனேகமாக ஒவ்வொருவருடைய கையும் மேலே உயரும். ஒருவேளை நான், "எத்தனைபேர் துன்புறுத்தப்படுதலை விரும்புகிறீர்கள்?" என்று கேட்டால், ஒருசில (அதுவும் சந்தேகமே) கைகள் மட்டுமே உயரும். இருந்தபோதிலும் மத்தேயு 5:10ல் இயேசு, மகிழ்ச்சியையும் துன்புறுத்தப்படுதலையும் ஒன்றிணைத்தார்: "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." பிலிப்பியர் என்பவரின் வேதாகம மொழிபெயர்ப்பு இதைப் பின்வருமாறு கூறுகிறது: "துன்பப்படுத்தப்பட்டுள்ளவர்கள் சந்தோஷமானவர்கள் …" எட்டாவது பாக்கியத்தில் நாம் இயல்பான தூண்டுதல் மற்றும் தேவனுடைய கரங்களில் உள்ள ஆளுமைத்துவத்தின் பதில் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நேர்மாறைக் கொண்டுள்ளோம். ஹியூகோ மெக்கார்டு பின்வருமாறு எழுதினார்:

> சுய - பாதுகாத்தல் என்பது இயற்கையின் முதலாவது விதி என்று கூறப்பட்டுள்ளது. எட்டாவது பாக்கியம் ஒரு மனிதரைப் பற்றிக்கொள்ளும்போது, அந்த மனிதர் இயற்கைக்கு [இயல்புக்கு] நேர்மாறாக செல்ல மனவிருப்பம் கொண்டுள்ளார். கிறிஸ்தவம் என்பது சுய - பாதுகாத்தலுக்கு எதிரானதாக உள்ளது. இயேசுவின் மீதான பற்றுதல் முழுமையாக மேம்படுத்தப்படும்போது, ஒரு கிறிஸ்தவர் பின்வருமாறு கூறுகிறார்: "ஜீவனாலாகிலும், சாவினாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார்" (பிலிப்பியர் 1:20). அவர் சாட்டையடியைப் பற்றி … தவறாக நடத்தப்படுதல் என்றல்ல ஆனால் ஒரு விசேஷித்த தயவு என்று நினைக்கிறார்! அவரைப் பொறுத்த மட்டில், "கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் … அருளப்பட்டிருக்கிறது" (பிலிப்பியர் 1:29).[1]

கடைசி பாக்கியத்தில் நாம், முதல் பாக்கியத்தில் தரப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தின் முழுவட்டத்திற்கு வருகிறோம்: "பரலோகராஜ்யம் அவர்களுடையது." 5:3ல் ஆவிக்குரிய வகையில் தங்கள் கைவிடப்பட்ட நிலையை ஒப்புக்கொள்பவர்களுக்கு இந்த ஆசீர்வாதம் தரப்பட்டது. இவ்வசனத்தைத் தொடர்ந்து நாம், ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருத்தலின் விளைவாக ஏற்படும் எண்ணப்போக்குகள் மற்றும் செயல்பாடுகளைக் கொண்டிருக்கிறோம்.

*கடைசியாக 5:10ல் நாம், ஆவிக்குரிய வகையில் வறியவர்களாக இருத்தலின் இன்னும் அதிகமானதொரு சொல்விளக்கத்தைக் கொண்டிருக்கிறோம்: துன்பப்படுத்தப் படும்போதும்கூட நேர்மறையான எண்ணப்போக்கைப் பராமரித்தல்.*

*நீங்கள் மத்தேயு 5:3-12ஐக் கண்ணோக்குகையில், எட்டாவது பாக்கியத்தைப் பற்றிய மாறுபாடான விஷயங்கள் சிலவற்றைக் கவனிக்கலாம். மற்ற பாக்கியங்களைப் போன்றே இதுவும் ஒரே ஒரு வாக்கியத்தால் அமைந்துள்ளது மற்றும் இதுவும் படர்க்கைப் பெயர்ச்சொல்லிலேயே உள்ளது;[2] ஆனால் மற்ற பாக்கியங்களைப் போலின்றி, இதைத் தொடர்ந்து முன்னிலைப் பெயர்ச்சொல்லில் இரண்டு கூடுதல் வாக்கியங்கள் வருகின்றன.[3] இயேசு இந்த பாக்கியத்தைத் தமது சீஷர்களுக்கு நேரடியாக நடைமுறைப்படுத்திக்கொண்டிருந்தார். இயேசு ஏன் இந்த பாக்கியத்தை விரிவுபடுத்தி மற்றவற்றை அவ்வாறு செய்யாதிருந்தார்? ஒருவேளை அவர், முந்திய பாக்கியங்களில் வரைகுறிப்பிடப்பட்ட பண்பின் வகையை மேம்படுத்திக்கொண்டால் அவர்கள் இந்த உலகத்தில் இருந்து எதை எதிர்பார்க்க முடியும் என்பதை, தம்மைப் பின்பற்றுபவர்கள் அறிய வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். ஒருவேளை அவர், தமது சீஷர்கள் துன்புறுத்தப்படுதலில் எந்த ஆசீர்வாதத்தையும் காண்பது என்பது அவர்களுக்கு எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை உணர்ந்து அறிந்ததால் தமது சிந்தனையை விரிவாக்கியிருக்கலாம்.*

*இந்த பாக்கியம் ஒருவசன நீளத்திற்குப் பதிலாக மூன்று வசனங்கள் நீளம் கொண்டிருப்பதால், மற்றும் இது (நிபந்தனை மற்றும் வாக்குத்தத்தம் என்ற) வழக்கமான இரு சிந்தனைகளுக்குப் பதிலாக சிந்தனைகளின் பலவகையைக் கொண்டிருப்பதால், இந்த பாடத்தின் வடிவமைப்பு, இப்பாடத் தொடரின் மற்ற பாடங்களிலிருந்து சற்றே வேறுபட்டிருக்கும்.*

## துன்புறுத்தப்படுதல் தவிர்க்க இயலாததாக உள்ளது

*நமது வேதவசனப் பகுதியில் இயேசு, குறைந்தபட்சம் இரு செய்திகளைத் தர விரும்பினார். முதலாவது, துன்புறுத்தப்படுதல் என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது என்பதாகும். துன்புறுத்தப்படுதல் என்பது இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்குத் திகைப்புக்குரிய விஷயமாக இருத்தலை இயேசு விரும்பவில்லை; அவர்கள் அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் தமது மரணத்திற்குச் சற்று முன்பாக, அப்போஸ்தலர்களிடத்தில், "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள் ..." என்று கூறினார் (யோவான் 15:20).*

*துன்புறுத்தப்பட்டு இருத்தலைப் பற்றி இயேசு பேசியபோது, அவர் தமது சீஷர்களுக்கு "துன்புறுத்தப்படுதலின் பல கூறுகள் இணைந்த தொகுப்பு ஒன்றை" தர முயற்சி செய்யவில்லை.[4] எல்லாரும் தனக்கு எதிராக உள்ளனர் என்று நினைக்கும், எல்லா வகையான அவமானங்களையும் தவறாகப் பயன்படுத்தப்படுதல்களையும் கற்பனை செய்துகொள்ளும் தனிநபரைக் காட்டிலும் அதிகமாகப் பரிதபிக்கப்படத்தக்க நிலையில் வேறு எவரும் இருப்பதில்லை. இயேசு பின்வரும் உண்மையை மாத்திரமே எடுத்துரைத்தார்:*

தேவனுடைய உண்மையான பிள்ளையாக இருப்பவர் துன்புறுத்தப் படுதலைத் தவிர்க்க இயலாது. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை, வரும் தீங்கை உணர்தலினால் நிரப்ப விரும்பவில்லை, ஆனால் அவர்கள் எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார்.

துன்புறுத்தப் பட்டிருத்தல் என்பது, ஒருவர் தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறார் என்பதற்கு வழுவாத நிரூபணமாக உள்ளது என்றும் இயேசு கருத்துத் தெரிவிக்கவில்லை. துன்புறுத்தப்பட்டிருத்தல் என்பது சீஷத்துவத்தின் *விளைவாக* இருப்பதற்கு உள்ளதைக் காட்டிலும் அதிகமாக சீஷத்துவத்தின் *நிரூபணமாக* இருப்பதில்லை. நான், "தாய்மைத்துவத்தின் நிமித்தமாகத் துன்புற்று இருந்துள்ள தாய்மார்கள் மகிழ்ச்சியானவர்கள், பாக்கியவான்கள்" என்று கூறினால், துன்புற்று இருந்துள்ள எல்லாரும் தாய்மார்களாக உள்ளனர் என்று நான் மறைமுகமாய் உணர்த்துவதில்லை. துன்புறுதல் என்பது தாய்மைத்துவத்தின் *நிரூபணமாக* இருப்பதில்லை, ஆனால் (பிள்ளைகளைப் பெறுதலின் வேதனை உட்பட) தாய்மார்களாக இருப்பதன் *விளைவாக* உள்ளது. சில மதக்குழுக்களின் தலைவர்கள், தாங்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையே தாங்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்பதற்கான நிரூபணமாக உள்ளது என்று வலியுறுத்தி இருப்பதால் நான் இதைக் குறிப்பிடுகிறேன். இயேசு, "துன்புறுத்தப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் வெறுக்கத் தக்கவர்களாக, செருக்குள்ளவர்களாக அல்லது குற்றத்தன்மையுள்ளவர்களாக இருக்கின்றனர்" என்று கூறவில்லை.

இயேசு, "*நீதியினிமித்தம்* துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்றுதான் கூறினார். இந்தப் பாடவரிசையின் முதல் பாடத்தில் "நீதி" என்பதைப் பற்றி நாம் கூறியது என்ன என்பதை உங்கள் மனதில் மறுகண்ணோட்டம் இடுங்கள்: அது தேவனுடைய நீதியான பண்பைக் குறிப்பிடக்கூடும்; அது கர்த்தரால் நீதிமான்கள் என்று எண்ணப்பட்டு இருத்தலைக் குறிப்பிடக்கூடும்; அது நீதியான வாழ்வைக் குறிப்பிடக்கூடும். ஆகவே நாம், பிதாவானவர் கட்டளையிட்டு இருக்கிறபடி வாழ முயற்சி செய்துகொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளையாக இருப்பதற்காக, ஒருவர் துன்புறுத்தப்பட்டு இருத்தலைப் பற்றி இயேசு பேசினார் என்று முடிவுசெய்யலாம். இருப்பினும் இதை இயேசு அதைக் காட்டிலும் அதிகம் எளிமையாக 11ம் வசனத்தில் கூறினார். அங்கு அவர், "என்னிமித்தம் உங்களை ... துன்பப்படுத்தி ... சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இதற்கு இணைவசனமாக லூக்கா சுவிசேஷத்தில் அவர், "*மனுஷகுமாரன் நிமித்தமாக* ஜனங்கள் உங்களைப் பகைத்து ... விடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (6:22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசுவைப் பின்பற்றுதல் மற்றும் அவரைப் போன்று இருக்க முயற்சி செய்தல் ஆகியவற்றின் விளைவு என்ற வகையில் வருகிற துன்புறுத்தப் பட்டிருத்தல் பற்றி அவர் [இயேசு] பேசினார். அவர், "அவர்கள் என்னைத் துன்புறுத்தியுள்ளனர் என்றால், உங்களையும் துன்புறுத்துவார்கள்" என்று கூறினார் என்பதை நினைவில் வையுங்கள். பேதுரு, "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் [கிறிஸ்துவுக்கு உரியவனாக இருப்பதினால்] பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை

மகிமைப்படுத்தக்கடவன்" என்று எழுதினார் (1 பேதுரு 4:16).

நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால் துன்புறுத்தப்படுதலை நாம் முன்னெதிர் நோக்க முடியும் என்று வலியுறுத்தியவர் இயேசு ஒருவர் மாத்திரமல்ல. தீமோத்தேயுவுக்குப் பவுல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று கூறினார் (2 தீமோத்தேயு 3:12; காண்க நடபடிகள் 14:22). காற்றில் நீங்கள் எதையேனும் மேலே தூக்கி எறிந்தால் அது கீழே வருவது எவ்வளவு நிச்சயமோ, அந்த அளவிற்குப் பின்வரும் ஆவிக்குரிய சத்தியமும் நிச்சயமானதாக உள்ளது: கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியான வாழ்வை வாழ விரும்புகிற யாவரும் *துன்புறுத்தப்படுவார்கள்*. இயேசு மற்றும் பவுல் ஆகியோரின் கூற்றுப்படி, துன்புறுத்தப்படுதலின் உடல்ரீதியான அல்லது உணர்வுப்பூர்வமான சவுக்கடியை நாம் உணராது இருப்பதால், சுயபரிசோதனை அத்தியாவசியமானதாக உள்ளது: நாம் *உண்மையிலேயே* "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாக வாழ விரும்புகிறோமா"?

தேவபக்தியாய் வாழ விரும்புகிறவர்களுக்குத் துன்புறுத்தப்படுதல் தவிர்க்க முடியாததாக இருப்பது ஏன்? சரி மற்றும் தவறு, நல்லது மற்றும் பொல்லாங்கு ஆகியவற்றிற்கு இடையில் எப்போதுமே மன இறுக்கம் நிலவுகிறது. இயேசு, "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்" என்று கூறினார் (யோவான் 3:19, 20). பொல்லாங்கின் சக்திகள் நீதியின் சக்திகளுக்கு எதிராகத் தொடர்ந்து யுத்தம் செய்வதால் (காண்க எபேசியர் 6:10-17), நீதிக்காக உண்மையாக நிற்பவர்கள் துன்புறுத்தப்படுதலை எதிர்பார்க்க முடியும். பிசாசுக்கு இணங்கிப்போக மறுக்கிற ஒருவர் அவனது கைகளில் முரட்டுத்தனமாக நடத்தப்படுதலை எதிர்பார்க்க முடியும்.

**துன்புறுத்தப்படுதல் [என்பது]: என்ன?**

இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் துன்புறுத்தப்படுதலுக்குத் தயாராக இருப்பதற்கு உதவி செய்வதற்காக அவர்களிடத்தில், துன்புறுத்தப்படுதல் நடைபெறும் சில வடிவமைப்புகளைப் பற்றிக் கூறினார்: "என்னிமித்தம் உங்களை *நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால்* பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (மத்தேயு 5:11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இதற்கு இணைக்குறிப்பாக சமவெளியில் செய்யப்பட்ட பிரசங்கத்தில் உள்ள வசனப்பகுதியில் அவர், "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் *பகைத்து*, உங்களைப் *புறம்பாக்கி*, உங்களை *நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது* நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (லூக்கா 6:22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்த இரு வசனப் பகுதிகளிலும் இயேசு, குறைந்த பட்சமாக, துன்புறுத்தப்படுதலின் ஐந்து வகைகளைப் பட்டியலிட்டார்.

(1) *பகைத்தல்.* லூக்கா 6ல் இயேசு "ஜனங்கள் உங்களைப் பகைத்து" என்ற நிலைவரும் காலம் பற்றிப் பேசினார். ஜனங்கள் உங்களைப் பகைப்பதற்குக்

காரணமாவது என்ன? அவர்கள் உங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை முற்றிலுமாகப் புரிந்து கொள்ள இயலாததால் உங்களைப் பகைக்கலாம். கல்லூரியில் மிகச்சிறந்த கால்பந்து வீரராக இருந்த ஒரு இளைஞரை நான் ஞானஸ்நானப்படுத்திய வேளையை நோக்கி என் மனம் பின்னாகச் செல்கிறது. அந்த இளைஞர் ஞானஸ்நானத் தண்ணீரில் இருந்து வெளியே வருகையில், அவருக்குள் உற்சாகம் கொப்பளித்துக் கொண்டிருந்தது; அவர் தமது நண்பர்களிடத்தில் [சுவிசேஷத்தைக்] கூறக் காத்திருக்க இயலாதிருந்தார். [ஆனால்] விரைவிலேயே அவர் மிகவும் ஊக்கம் இழந்தவராக என்னிடத்தில் வந்தார். அவரது "நண்பர்கள்," அவரது மனமாற்றம் குறித்து மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக, அவரது முடிவைக் குறித்து அவர்கள் ஏளனம் செய்தனர். நான் அவருக்கு 1 பேதுரு 4:4ஐச் சுட்டிக்காண்பித்தேன்: "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்."

மக்கள், நீங்கள் வாழும் வாழ்வின் மூலமாகத் தாங்கள் மிகவும் கடிந்துகொள்ளப்படுவதாக உணருகின்றனர் என்பது அவர்கள் உங்களைப் பகைப்பதற்கான இன்னொரு காரணமாக உள்ளது. மனந்திரும்பியவர்கள் தங்கள் செயல்களினால், மனந்திரும்பாதவர்கள்மீது நியாயத்தீர்ப்பு உரைப்பது போலவே (காண்க மத்தேயு 12:41), தேவபக்தியுள்ளவர்கள் தங்கள் வாழ்க்கையினால், தேவபக்தி இல்லாதவர்களை "நியாயந்தீர்க்கின்றனர்." இந்த உலப்பிரகாரமாக வாழுகின்றவர்கள், தங்கள் தரத்தைக் காட்டிலும் உயர்வான தரத்தைக் கொண்டவர்களை அவமதிக்கின்றனர்.

(2) *புறம்பாக்குதல்.* லூக்கா 6ல் இயேசு அடுத்ததாக, "ஜனங்கள் … உங்களைப் புறம்பாக்கி" என்ற நிலைவரும் காலத்தைப் பற்றிப் பேசினார். KJV வேதாகமத்தில், "அவர்கள் உங்களைத் தங்கள் தோழமையிலிருந்து பிரித்து வைப்பார்கள்" என்றுள்ளது. பல கிறிஸ்தவர்கள் சமூகத்தில் இருந்து புறம்பாக்கப்பட்டனர். அவர்கள் மனச்சாட்சியின் உணர்வுடன், அந்த நாளின் புறதெய்வ வணக்கம் சார்ந்த பண்டிகைகளில் கலந்துகொள்ள இயலாதிருந்தனர். அவர்களில் பலர் தங்கள் வேலைகளை இழந்தனர். கிறிஸ்தவர்கள் ஆகியிருந்த சிலர் தங்கள் குடும்பங்களில் இருந்து புறம்பாக்கப் பட்டிருந்தனர். மத்தேயு 10ல் இயேசு இருதயம் உடைந்துபோகச் செய்யும் பின்வரும் வார்த்தைகளைப் பேசினார்:

> பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே (வசனங்கள் 34-36).

"பூமியின்மீது சமாதானத்தைக் கொண்டுவருதல்" என்பது கிறிஸ்து இங்கு வருவதற்கன ஒரு நோக்கமாக *இருந்தது*,[5] ஆனால் சுவிசேஷமானது ஒவ்வொரு இல்லத்திலும் சமாதானத்தைக் கொண்டுவராது என்பதை அவர் அறிந்திருந்தார். குறிப்பிட்ட இல்லங்களில் இருப்பவர்களில் சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மற்றவர்கள் அவ்வாறு செய்ய மறுக்கும்போது, அது ஒரு பட்டயத்தைக் கொண்டுவரும். இந்த பாடங்களைப் படிப்பவர்களில் பலர்,

இதை நான் புரிந்து கொள்வதைக் காட்டிலும் சிறப்பாகப் புரிந்துகொள்வர். கிறிஸ்துவைப் பின்பற்ற முடிவு செய்ததால் தங்கள் குடும்பங்களில் இருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ளவர்களைப் பற்றி நான் பேசுகிறேன்.

மதரீதியான சுதந்தரத்தை மக்கள் மதிக்கும் அமெரிக்காவிலும்கூட, புறம்பாக்குதல் நடக்கிறது. ஒருவேளை கும்பலுடன் ஒன்றாக இணைந்து செல்ல மறுத்த காரணத்தினால், தங்கள் சமவயதுக் குழுக்களினால் ஏற்றுக்கொள்ளப்படுதலை விரும்பும் கிறிஸ்தவ இளைஞர்கள், தங்களைத் தாங்களே புறம்பாக இருப்பதாக அடிக்கடி கண்டறிதலைக் காட்டிலும் இதை வேறு எவரும் அதிக முனைப்பாக உணர்வதில்லை எனலாம் (காண்க யாத்திராகமம் 23:2அ).

(3) *நிந்தனை.* மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இரு சுவிசேஷங்களிலுமே, ‘‘உங்களை நிந்தித்து’’ என்ற வார்த்தைகள் உள்ளன. இயேசு தாமே நிந்திக்கப்பட்டார். அவரது விரோதிகள் அவரை, ‘‘போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன்’’ என்று அழைத்தனர் (மத்தேயு 11:19) மற்றும் அவர் “பிசாசு பிடித்தவன்” என்றும் கூறினர் (யோவான் 10:20; காண்க 8:48). இயேசு நிந்திக்கப்பட்டார் என்றால், நாம் நிந்திக்கப்பட்டிருத்தல் பற்றித் திகைப்படையக் கூடாது. நாம் நிந்திக்கப்படும்போது அது நமது உள்ளத்தைப் புண்படுத்துகிறது. நாவைக் காட்டிலும் கூர்மையான ஆயுதம் வேறு எதுவும் இல்லை. நாம் சிறு பிள்ளைகளாக இருந்தபோது, நம்மில் சிலர் பின்வரும் பாடலை நம்மில் சிலர் கற்றிருக்கலாம்: “குச்சிகளும் கற்களும் என் எலும்புகளை உடைக்கக்கூடும், ஆனால் வார்த்தைகள் என்னை ஒருக்காலும் காயப்படுத்த முடியாது.’’ முதியவர்களாக வளருதலில் நாம், குச்சிகள் மற்றும் கற்கள் ஆகியவற்றைக் காட்டிலும் வார்த்தைகள் மிக அதிகமாகக் காயப்படுத்துபவையாக இருக்கக்கூடும் என்று கற்றிருக்கிறோம். குச்சிகளும் கற்களும் எலும்புகளைக் காயப்படுத்தி தோலைப் புண்ணாக்குதலை மாத்திரமே செய்ய முடியும், ஆனால் வார்த்தைகள் இருதயத்தை உடைக்கவும் ஆவியைப் பேரழிவுக்கு ஆட்படுத்தவும் முடியும்.

(4) *புறங்கூறப்படுதல் மற்றும் தவறானவை கூறப்படுதல்.* இது நிந்தித்தலுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளது. மத்தேயு சுவிசேஷத்தில், “பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால்” என்றுள்ள வேளையில் லூக்கா சுவிசேஷத்தில், ‘‘உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது’’ என்றுள்ளது. ஒருவர் சரியானதைச் செய்ய முயற்சிக்கும்போது, அவரை மற்றவர்கள் தவறாகக் கூறுதல் என்பது பொதுவானது அல்லாததாக இருப்பதில்லை. யோசேப்பு போத்திபாரின் மனைவியுடன் விபசாரம் செய்ய மறுத்த போது, அவர் அவளைக் களங்கப்படுத்த முயற்சி செய்ததாக அவள் கூறினாள் (காண்க ஆதியாகமம் 39:6ஆ-18). யாக்கோபு தமது கிறிஸ்தவ வாசகர்களிடத்தில், ‘‘உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை[6] அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?’’ என்று கேட்டார் (யாக்கோபு 2:7). நீங்கள் “வேதாகமத்தின் விஷயங்களை வேதாகமத்தின் வழிகளில் செய்தல்” என்பதை வலியுறுத்தினால், நீங்கள் “குறுகிய மனப்பான்மை கொண்டவர்” அல்லது “சட்டம் பேசுபவர்” அல்லது “குளிர்ந்த மற்றும் உணர்வற்றவர்” என்று கூட அழைக்கப்படலாம்.[7] தவறாகக் கூறப் படுதல் என்பது புண்படுத்தக் கூடும், ஆனால் சமவெளியில் செய்த பிரசங்கத்தில் இயேசு பின்வருவதைக் கூடுதலாகக்

*கூறினார் என்பதை மறந்து விடாதீர்கள்: "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" (லூக்கா 6:26).*

இங்கு நாம், சமானநிலையின் தேவையை ஆழ்ந்து சிந்திக்கச் சற்றே தாமதிக்க வேண்டும். ஒரு சபைக்குழுமம், சமூகத்தில் ஒரு நற்பெயரைப் பெற விரும்புவதில் தவறு எதுவும் இல்லை. இயேசுவும்கூட, "மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக்கா 2:42).இருப்பினும் அப்படிப்பட்ட விருப்பம் சத்தியத்திற்காக நிலைநிற்குதலுக்கு மேலான இடத்தைக் பெறும்போது, நமது வலியுறுத்தம் தவறானதாக உள்ளது. இயேசு, "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ" என்று கூறியதை மறந்துவிட வேண்டாம்.

*(5) வரம்பு மீறித் துன்பப்படுத்துதல்.* மத்தேயு சுவிசேஷ விபரம் "துன்புறுத்துதல்" அல்லது "துன்புறுத்தினர்" என்ற வார்த்தைகளை மூன்று முறை பயன்படுத்துகிறது (வசனங்கள் 10-12). இவ்வார்த்தைகள் "நாடித்தேடுதல்" என்று அர்த்தப்படுகிற (*dioko* என்ற) வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளன.[8] மத்தேயு 5:10ல் இந்தச் சொற்றொடர், "அலைக்கழிக்கப்பட்டு, வேட்டையாடப்பட்டு, பாழாக்கப்பட்டு [அழிக்கப்பட்டு] இருக்கிறவர்கள்" என்பதைக் குறிப்பதாக ஒரு எழுத்தாளர் கூறினார். இந்தச் சொற்றொடர் வேட்டையாடுபவர்களால் தொடரப்படுகிற காட்டுவிலங்கைப் பற்றிப் பேசத் தக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.[9] தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், தங்கள் உடைமைகள் அபகரிக்கப்பட்டு, சிறையில் அடைத்துத் துன்புறுத்தப்பட்டு, மற்றும் அவர்களில் பலர் கொலைசெய்யப்பட்ட வேளையில் அடிக்கடி, "வேட்டையாடுபவர்களால் பின் தொடரப்பட்ட மிருகங்களைப்" போன்று உணர்ந்திருக்க வேண்டும்.

**துன்புறுத்துதல்: யார்?**

இவைபோன்ற துன்புறுத்தப்படுதல்கள் வந்தபோது இயேசு, நீதியினிமித்தம் துன்புறுத்தப்பட்டவர்களில் தாங்களே முதலாவதாக இருக்கவில்லை என்பதைத் தமது சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் துன்புறுத்தப்பட்டபோது, அவர்கள் நல்ல தோழமையில் இருந்தனர், "ஏனெனில் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:12). முன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ள துன்புறுத்துதலின் வகைகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள்.

*(1) பகைத்தல்.* தீர்க்கதரிசிகள் பிரபலமான குழுவாக இருக்கவில்லை. இஸ்ரவேலின் அரசராக இருந்த ஆகாப் என்பவர், தீர்க்கதரிசியாகிய மிகாயாவைப் பற்றி, "நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே எப்பொழுதும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன்" என்று கூறினார் (2 நாளாகமம் 18:7).

*(2) புறம்பாக்குதல்.* தீர்க்கதரிசிகளின் பிரபலமற்ற தன்மையினால், அவர்கள் சில வேளைகளில் தனிமையில் வாழ நேர்ந்தது (காண்க 1 இராஜாக்கள் 17:1-7).

*(3) நிந்தைகள்.* ஆகாப் எலியாவை, "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன்" என்று அழைத்தார் (1 இராஜாக்கள் 18:17). தேவனுடைய வசனங்கள் பற்றிய உங்கள் உறுதிப்பாடுகளை நீங்கள் சமரசம் செய்ய மறுத்தால், நீங்கள்

கலங்கபண்ணுகிறவர் என்று அழைக்கப்படலாம். இருப்பினும் எலியாவின் பதிலுரையைக் கவனியுங்கள்: "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களை [பிறதெய்வங்களை]ப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாரும் இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்" (வசனம் 18).

*(4) புறங்கூறப்படுதல் மற்றும் தவறாகக் கூறப்படுதல்.* தானியேல் தேவனிடத்தில் ஜெபிக்கத் தொடர்ந்தபோது, மற்ற அரசு ஊழியர்கள் அவரை, பாபிலோனின் அரசருக்கு பற்றுருதி அற்ற வகையில் இருந்தார் என்று குற்றம் சாட்டினர் (காண்க தானியேல் 6:1-15).

*(5) உடல்ரீதியான துன்புறுத்துதல்கள்.* எரேமியா அடிக்கப்பட்டார் (எரேமியா 20:2). அனானி சிறையில் அடைக்கப்பட்டார் (2 நாளாகமம் 16:7, 10). சகரியா கல்லெறியப்பட்டார் (2 நாளாகமம் 24:21). யூதப் பாரம்பரியத்தின்படி, ஏசாயா, குழல் போன்ற மரக்கட்டையினுள் வைக்கப்பட்டு இரண்டாக அறுக்கப்பட்டார் (காண்க எபிரெயர் 11:37).

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளை ஒரு விவரிப்பாக இயேசு பயன்படுத்தியபோது, துன்புறுத்தப்படுதல் என்பது தேவனுடைய தயவின்மையின் அடையாளமாக இருப்பதில்லை, ஏனெனில் தேவன்மீது அன்புகூர்ந்தவர்கள் துன்புற வேண்டியிருந்தது மற்றும் இன்னமும் துன்புற்றனர் என்று தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு உறுதிப்படுத்தினார். துன்புறுத்தப்படுதல் என்பது ஒருவரை விசுவாசம் நிறைந்தவர்களின் சகோதரத்துவத்தில் வைக்கிறது. இயேசு தாமே துன்புற்றார். "கிறிஸ்துவும் உங்களுக்குக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" (1 பேதுரு 2:21). இயேசுவின் அப்போஸ்தலர்களும் துன்புற்றனர். அவர், யாக்கோபுவும் யோவானும் பாடுகளின் பாத்திரத்தில் பானம்பண்ணுவார்கள் என்றும் பாடுகளின் ஞானஸ்நானத்தைப் பெறுவார்கள் என்றும் கூறினார் (காண்க மாற்கு 10:39). யாக்கோபுவே முதலாவதாக மரித்த அப்போஸ்தலராயிருந்தார், அவர் கி.பி. சுமார் 44ல் ஏரோதினால் பட்டயத்தால் கொல்லப்பட்டார் (காண்க நடபடிகள் 12:1, 2). யோவான் பத்முதீவிற்கு நாடுகடத்தப்பட்டார் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 1:9).[10] மற்ற அப்போஸ்தலர்களுக்கு என்ன நடந்தது என்று நாம் நிச்சயமாய்க் கூறமுடிவதில்லை, ஆனால் அவர்களின் மரணத்தைப் பற்றிய மனிதப் பாரம்பரியக்கூற்றுகள் சில பின்வருமாறு:[11]

- பேதுரு - தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டார்.
- அந்திரேயா - எடெஸ்ஸாவில் ஒரு சிலுவையில் வேதசாட்சியாக மரித்தார்.
- பிலிப்பு - சவுக்கடிபட்டு, சிறையில் அடைக்கப்பட்டார் பின்பு ஹெர்ரோபொலிஸ் என்ற இடத்தில் சிலுவையில் அறையப்பட்டார்.
- பர்த்தொலொமேயு - அடிக்கப்பட்டு பின்பு சிலுவையில் அறையப்பட்டார்.
- தோமா - ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார்.
- மத்தேயு - எத்தியோப்பியாவில் பட்டயத்தால் வெட்டப்பட்டார்.
- அல்பேயுவின் குமாரனான யாக்கோபு - எகிப்தில் வேதசாட்சியாக

மரித்தார்.

- ததேயு - சிலுவையில் அறையப்பட்டார்.
- செலோத்தே என்னப்பட்ட சீமோன் - சிலுவையில் அறையப்பட்டார்.
- மத்தியா - கல்லால் எறியப்பட்டு பின்பு தலை வெட்டப்பட்டார்.
- பவுல் - ரோமாபுரியில் தலை வெட்டப்பட்டார்.[12]

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவினிமித்தம் துன்புற்ற இந்த சகோதரத்துவத்தின் பகுதியாக இருந்தனர். ரோமப் பேரரசராக இருந்த நீரோ, கிறிஸ்தவர்களைக் காட்டு மிருகங்களின் தோல்களுக்குள் வைத்துத் தைத்துப் பின்பு அவர்களின் மீது நாய்களை ஏவிவிட்டார். அவர் மெழுகினால் விரைக்கச் செய்யப்பட்ட உடைகளை அவர்களுக்கு அணிவித்து, பின்பு அவர்களை மரத்தூண்களில் கட்டிவைத்து உயிரோடு அவர்களை எரித்தார். எனது குடும்பத்துடன் நான் ரோமாபுரிக்குச் சென்றிருந்தபோது, நீரோ தமது விருந்துக் கொண்டாட்டங்களுக்கு வெளிச்சம் தருவதற்காகக் கிறிஸ்தவர்களைத் தீப்பந்தமாக எரித்துப் பயன்படுத்திய சிறுகுன்றின் மீது நான் நின்றேன். டொமீஷியன் என்பவர், "நீதிபதியின் இருக்கையின் முன்பாக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்ட எந்தக் கிறிஸ்தவரும், தமது மார்க்கத்தைத் துறப்பதாகக் கூறாதநிலையில் தண்டனையில் இருந்து விலக்கம் அளிக்கப்படக் கூடாது" என்று உத்தரவு இட்டிருந்தார்.[13] தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த பல்வேறு சித்திரவதைகளும் கொடுமைகளும், அவற்றைப் பட்டியலிட என்னால் கூடாத அளவுக்கு மிகவும் ஏராளமாக இருந்தன. அவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்து விட்டதற்காக மிகநீண்ட காலமாகவும் பயங்கரமாகவும் துன்புற்றனர் என்று கூறுவது போதுமானதாகும்.[14]

இன்றைய நாட்களிலும் துன்புறுத்தப்படுதல் தொடருகிறது. சில நாடுகளில், பிறரைக் கிறிஸ்தவர் ஆகும்படி ஊக்குவித்தல் என்பது சட்டவிரோதமான செயலாக உள்ளது. மதசுதந்தரம் உள்ள நாடுகளில் கூட, வெறுப்புணர்வு, விமர்சனம், நிந்தைகள், புறங்கூறுதல் மற்றும் தவறாகக் கூறுதல் ஆகியவை மறைமுகமாக உள்ளன.[15] இது சிலரை, உடல்ரீதியான துன்புறுத்துதலைக் காட்டிலும் அதிகம் மோசமாகப் பாதிக்கிறது. அவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டும் அல்லது மரிக்க வேண்டும் என்று அறைகூவல் விடப்பட்டிருந்தால், மரணத்தையே அவர்கள் தேர்ந்து கொண்டிருப்பார்கள். இருப்பினும், துன்புறுத்தப்படுதல் என்பது அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக வருகிற வேளையில், அது அவர்களின் விசுவாசத்தையும் நீடியபொறுமையையும் ஒரு புற்றுநோயைப் போன்று பட்சித்து விடுகிறது.

நீங்கள் கர்த்தருக்கு விசுவாசத்துடன் இருந்தால், விசுவாசம் என்பது எந்த வடிவத்தில் இருந்தாலும், துன்புறுத்தப்படுதல் என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது. அதுவே நமது வேதவசனப் பகுதியின் செய்திகளில் ஒன்றாக உள்ளது.

## நீங்கள் இன்னமும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்

துன்புறுத்தப்படுதலின் தவிர்க்க இயலாத நிலையிலும் கூட நீங்கள் அகமகிழ்ந்து மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பது இரண்டாவது செய்தியாக உள்ளது. இயேசு, "அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" என்று கூறினார் (லூக்கா 6:23அ). அவர் அவ்வார்த்தைகளை உச்சரித்ததை

நேரில் கேட்ட ஒருவர் பிற்பாடு, "நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து; கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்" என்று எழுதினார் (1 பேதுரு 3:14, 15அ; காண்க 4:16). நாம் தவறாக நடத்தப்படும்போது மகிழ்ச்சியாக இருப்பது சுலபமாக இருப்பதில்லை, ஆனால் மகிழ்ச்சி என்ற பாடக்கருத்திற்கு இதுவே அடிப்படையாக உள்ளது. நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால், நமக்கு உபத்திரவங்கள் வரும்போதுகூட நாம் மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலர்கள் அடிக்கப்பட்டு பிரசங்கிக்கக் கூடாது என்று கட்டளையிடப்பட்டபோது (நடபடிகள் 5:40), அவர்கள் "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய்" ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போயினர் (வசனம் 41). சுயபரிதவிப்பினால் அழுது புலம்புவதற்குப் பதிலாக அவர்கள், "இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (வசனம் 42). பவுலும் சீலாவும் பிலிப்பி நகரில் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது, அவர்கள் முறையிடுவதற்குப்பதிலாக, தாங்கள் அடைக்கப்பட்டு இருந்த சிறைச்சாலை அறையை ஜெபங்களினாலும் தேவனை நோக்கிப் பாடிய துதியின் கீதங்களினாலும் நிரப்பினர் (நடபடிகள் 16:25). தொடக்ககாலத்தில் கிறிஸ்தவ வேதசாட்சிகளாக மரித்தவர்கள், கீதங்களைப் பாடிக்கொண்டே மரணம் அடைந்தனர் என்று கூறப்படுகிறது. போலிக்கார்ப்பு என்பவர் இயேசுவின் மீதுள்ள தமது விசுவாசத்தைக் கைவிட வேண்டும் அல்லது மரிக்க வேண்டும் என்று கூறப்பட்டபோது, அவர் "எண்பத்து ஆறு ஆண்டுகளாக நான் அவரைச் சேவித்திருக்கிறேன், அவர் எனக்கு ஒருமுறைகூடத் தவறு இழைத்தது இல்லை; அப்படியிருக்க என்னை இரட்சித்துள்ள எனது அரசருக்கு விரோதமாக நான் எப்படி தேவதூஷணம் கூறுவேன்?" என்று பதில் அளித்தார்.[16]

### ஏன் மகிழ்ச்சியடைய வேண்டும்?

துன்புறுத்தப்படுதல் வருகிறபோது "சந்தோஷப்பட்டு, களிகூருதல்" எவ்வாறு சாத்தியம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் நம்மில் பலருக்குச் சிரமமாக இருக்கிறது. அந்த விஷயத்தைத் தெளிவுபடுத்த என்னை அனுமதியுங்கள்: துன்புறுத்தப்படுதலை நாம் விரும்ப வேண்டும் என்றோ அல்லது நாம் துன்புறுத்தப்படுவதால் மாத்திரம் நாம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்றோ இயேசு அர்த்தப்படுத்தவில்லை. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு தாமே, "தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, *அவமானத்தை எண்ணாமல்,* சிலுவையைச் *சகித்து*" இருந்தார் என்று கூறினார் (எபிரெயர் 12:2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அப்படியென்றால் நாம் "நீதியினிமித்தம்" துன்புறுத்தப்படும்போது மகிழ்ச்சியாக இருக்க வேண்டியது ஏன்? நான் ஒருசில கருத்துக்களைத் தர அனுமதியுங்கள்.

*துன்புறுத்தப்படுதல் என்பது நமக்கு செய்யக்கூடியவற்றின் நிமித்தம்.* துன்புறுத்தப்படுதல் என்பது வாய்ப்புக்களைக் கொண்டு வரலாம். துன்புறுத்தப்படுதலின் சில வடிவங்கள், நாம் ஆவிக்குரிய வளர்ச்சி அடைய

நமக்கு வாய்ப்பை அளிக்கின்றன. யாக்கோபு பின்வருமாறு எழுதினார்,

> *என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது (யாக்கோபு 1:2-4; காண்க ரோமர் 5:3, 4).*

துன்புறுத்தப்படுதல் என்பது ஆவிக்குரிய வளர்ச்சியைத் தூண்டுவது மாத்திரமல்ல, ஆனால் அது தேவன் நமக்குத் தேவை என்பதை நாம் அறியச் செய்து அவரிடத்தில் அடைக்கலம் செல்ல நம்மை தூண்டுகிறது. பவுல் தமது வாழ்வைக் கர்த்தருக்கென்று ஒப்புவித்து இருந்ததால், அவரால் "... நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்று எழுத முடிந்தது (2 கொரிந்தியர் 12:10; காண்க வசனம் 9).

கிறிஸ்துவைப் போன்ற ஆவியைச் செயல்விளக்கப்படுத்துதல் என்பது, துன்புறுத்தப்படுதல் கொண்டுவரக்கூடிய இன்னொரு வாய்ப்பாக உள்ளது. இயேசு வையப்பட்டபோது [வாய்ச்சொற்களால் தாக்கப்பட்டபோது] "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும்" இருந்தார் (1 பேதுரு 2:23). அவரது உதாரணத்தைப் பின்பற்றும்படி நமக்கு அறைகூவல் விடப்பட்டுள்ளது: "வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்" (1 கொரிந்தியர் 4:12ஆ).[17]

*துன்புறுத்தப்படுதல் காண்பிக்கக் கூடியது என்ன என்பதன் நிமித்தம்.* துன்புறுத்தப்படுதல் என்பது நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சுட்டிக்காண்பிக்க முடியும்.[18] அப்போஸ்தலர்களைப் போன்று நாமும் "அவருடைய நாமத்துக்காக ... அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால்" மகிழ்ச்சி அடையக் கற்றுக்கொள்ள முடியும் (நடபடிகள் 5:41). தேவன், நமது திராணிக்கு மிஞ்சி நாம் சோதிக்கப்பட அனுமதிக்கமாட்டார் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (1 கொரிந்தியர் 10:13). துன்புறுத்தப்படுதல் என்பது நம்மைப் பற்றிக் கர்த்தரின் உயர்வான கருத்தை வெளிப்படுத்தலாம் என்று கூறப்பட்டுள்ளது; அதை நாம் அவரது உதவியுடன் சகிக்க முடியும் என்று நம்மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளார். துன்புறுத்தப்படுதல் என்பது நாம் கிறிஸ்துவின் ஊழியத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறோம் என்று சுட்டிக்காண்பிக்கலாம். சாத்தானும் அவனைப் பின்பற்றுபவர்களும். தங்களுக்கு அச்சுறுத்துதலாக இராதவர்களைக் குறித்துக் கவலை கொள்ளக் கொஞ்சமே காரணங் கொண்டுள்ளனர்.

அப்படியென்றால், நாம் துன்புறுத்தப்படுதலில் தேவனுடைய உதவியுடன் உயிர்பிழைத்து இருக்கும்போது, நாம் சோதனையைச் சந்தித்திருக்கிறோம் என்பதால் அகம் மகிழ முடியும். இயேசு, "*நீதியினிமித்தம்* துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார் என்பதைக் கவனியுங்கள்.[19] ஏற்கனவே துன்புறுத்தப்படுதலின் பெரும்புயலை சகித்திருந்து இன்னமும் உறுதியாக நிலைநிற்பவர்களுக்கு விசேஷித்த வலியுறுத்தம் தரப்பட்டுள்ளது. விசுவாசம் நிறைந்த இவர்கள் அகம் மகிழ நிச்சயமாகவே காரணம் கொண்டுள்ளனர்.

*துன்புறுத்தப்படுதல் என்பது நாம் எங்கு நோக்கி முன்செல்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டக் கூடுவதின் நிமித்தம்.* துன்புறுத்தப்படுதல் வருகிறபோது அகம் மகிழுதலுக்கான முதன்மைக் காரணம், நாம் அதைச் சகித்திருந்தால் தரப்படும் வாக்குத்தத்தமாக உள்ளது: "பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்தேயு 5:10ஆ). முதலாவதாக "ராஜ்யம்" என்ற வார்த்தையை வலியுறுத்த என்னை அனுமதியுங்கள்: இது தேவன் ஆளுகை செய்யும் வட்டாரமாக உள்ளது: துன்புறுத்தப்படுதல் என்பது நீங்கள் தேவனை உங்கள் இருதயத்தில் அரியணையேற்றி இருக்கிறீர்கள் என்பதற்குச் சாட்சியமாக இருக்கலாம். நாம் அவரது இராஜ்யத்தில் அங்கம் வகிக்கிறோம் என்று அறிதல் என்பது இந்த வாழ்வில் அவரது வாக்குத்தத்தத்தின் ஒருபகுதி நிறைவேற்றமாக உள்ளது.

இருப்பினும் இந்த பாக்கியத்தில் கவனக்குவிப்பு இனிவரும் வாழ்வின் மீது உள்ளது. 12அ வசனத்தில் இயேசு, "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; *பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்*" என்று கூடுதலாகக் கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது; காண்க லுக்கா 6:23அ). இந்த வாழ்வில் நமக்குக் கிடைக்கும் பலன் போதுமானதாக உள்ளது மற்றும் நமது தேவைகள் சந்திக்கப்படுகின்றன, ஆனால் பரலோகத்தில் நமது பலன் *மிகுதியாயிருக்கும்*. நீங்கள் துன்புற்று எல்லாவற்றையும் இழந்து போனாலும், தேவன் உங்களுக்கென்று ஒரு பரலோக இராஜ்யத்தை ஆயத்தம் செய்திருக்கிறார் என்று நீங்கள் அறிய முடியும். வாழ்வு எதைக் கொண்டு வந்தாலும், நாம் "நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூர" த்தைக் கொண்டிருக்கிறோம் (எபிரெயர் 6:19; காண்க 5:3, 4).

## முடிவுரை

நாம் பாக்கியங்களின் முடிவிற்கு வந்திருக்கிறோம். மாபெரும் இவ்வசனப் பகுதி, தேவன் நமக்குத் தேவை என்பதை உணர்ந்தறியச் செய்து, நமது போதுமற்ற தன்மைகளுக்காகத் துக்கப்படச் செய்து, நம்மைக் கர்த்தரிடத்தில் இணங்கச் செய்து, பட்டினியாயிருக்கும் ஒரு மனிதர் உணவுக்காக ஏங்குவது போன்று தேவனுக்காகவும் அவரது வழிக்காகவும் ஏங்கச் செய்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவர், இரக்கம் நிறைந்தவராக, இருதயத்தில் சுத்தமுள்ளவராக மற்றும் சமாதானம் பண்ணுகிறவராகச் செயல்படுவார் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இப்போது நமக்கு, இவ்விஷயங்களைச் செய்கிறவர்கள், புரிந்துகொள்ளாத, புரிந்துகொள்ள இயலாத உலகத்திலிருந்து துன்புறுத்துதலை எதிர்பார்க்க முடியும் என்றும் நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இயேசு செயல் விளைவில், "ஆனால் தேவன் உங்களுக்கு உதவுவார் என்பதால் எல்லாம் சரியாக உள்ளது. மேலும் நீங்கள் சகித்திருந்தால், நீங்கள் இங்கும் இனிவரும் வாழ்விலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்" என்றார்.

> *தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் எட்டாவது பாக்கியத்தை நேசித்தனர் ... இது அவர்கள் வன்முறையின் மிகக்கசப்பான நிகழ்வில் புன்முறுவல் பூக்கக் காரணமாயிற்று. இது அன்றாட ஆறுதலாக இருந்தது, ஏனெனில் அவர்கள் "இராஜ்யம்" தங்களுடையது மற்றும் "பரலோகத்தில்" தங்கள் பலன் மிகுதியாக இருக்கும் என்று அறிந்திருந்தனர். கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதம் என்ற உள்ளான எழுச்சியுடனும் ஆவிக்குரிய*

பலத்துடனும் அவர்கள் "துன்பங்களின் மாபெரும் போராட்டத்தை சகிக்கப் பலம்பெற்றிருந்தனர் (எபிரெயர் 10:32).[20]

நீண்ட காலத்திற்கு முன் இயேசு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரிடத்தில் கேட்டது போன்றே, இயேசு பானம்பண்ணிய பாடுகளின் பாத்திரத்தில் நாமும் பானம்பண்ண முடியுமா என்றும் பாடுகளின் ஸ்நானத்தை நாமும் பெற முடியுமா என்றும், இன்றைய நாட்களின் அவர் நம்மிடம் இன்னமும் கேட்கிறார். நீங்கள் நீதிக்கான நிலைப்பாட்டை மேற்கொண்டு "நீதிக்காக" வாழ அதாவது இயேசுவுக்காக வாழ உறுதிகொள்ள வேண்டும் என்பதே என் ஜெபமாக உள்ளது. நீங்கள் "அநேக உபத்திரவங்களின் வழியே கடந்து சென்றால்" (நடபடிகள் 14:22) ஒருநாளில் ஆத்துமாவின் இல்லத்திற்குள் பிரவேசிப்பீர்கள்.

---

குறிப்புகள்

[1]Hugo McCord, *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 54. [2]ஆங்கிலமொழியில், வேறு யாரைப் பற்றியாவது நீங்கள் பேசுகையில் "படர்க்கைப் பெயர்ச்சொல்" ("அவர்," "அவள்," "அவர்கள்") பயன்படுத்தப்படுகிறது. [3]ஆங்கில மொழியில் நீங்கள் யாருடனாவது பேசுகிறபோது "முன்னிலைப் பெயர்ச்சொல்" ("நீங்கள்") பயன்படுத்தப்படுகிறது. [4]"தியாக மனப்பான்மை" என்பது இதன் தொடர்புடைய சொற்றொடராக உள்ளது. இது அடிப்படையில் "சித்தபிரமை" கொண்டிருத்தல் போன்றதாகவே உள்ளது. [5]"தந்தையைப் போல மகன்" என்ற இதற்கு முந்திய பாடத்தில் காணவும். [6]"நல்ல நாமம்" என்பது கிறிஸ்துவினுடையதாக உள்ளது. நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும்போது, நாம் கிறிஸ்துவின் நாமத்தைக் கனப்படுத்துகிறோம் மற்றும் நாம் அவருக்கு உரியவர்கள் என்று அறிவிக்கிறோம். [7]சரியானவற்றிற்காக நிலைநிற்க முயற்சி செய்பவர்கள் மீது நிந்தைகள் மற்றும் தவறாகக் கூறப்படுதல் ஆகியவை குவிக்கப்படுதல் என்பது இடத்திற்கு இடம் வேறுபடும். நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருந்தும் வகையில் இதைத் தழுவி விரிவாக்கிக் கொள்ளுங்கள். [8]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 468. [9]Johann Jakob Wetstein (1693-1754); quoted in A. Lukyn Williams, "St. Matthew," *The Pulpit Commentary,* vol. 15, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 150. [10]மனிதப் பாரம்பரியத்தின்படி, டொமீஷியனின் மரணத்திற்குப் பின்பு யோவான் எபேசுவுக்குத் திரும்பி வந்து பிற்பாடு அங்கேயே மரித்தார் என்று கூறப்படுகிறது.

[11]பாரம்பரியங்கள் வேறுபடுகின்றன. இங்கு பட்டியலிடப் பட்டுள்ள பாரம்பரியக் கூற்றுக்களில் பெரும்பான்மையானவை John Foxe, *Fox's Book of Martyrs,* ed. William Byron Forbush (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1926) என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. [12]இரண்டு தீமோத்தேயு 4:6ம் வசனம் பவுலின் மரணத்தை முன்னெதிர் நோக்குகிறது. [13]Foxe, 6. [14]James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 75 என்பது தகவலுக்கான ஆதாரமூலங்களில் ஒன்றாக உள்ளது. [15]உங்கள் சமூகத்தில் நடைமுறைக்கு உகந்த வகையிலான விவரிப்புகளை நீங்கள் உட்செருகக் கூடும். அமெரிக்காவில் ஊடகங்கள், "அடிப்படையாளர்கள்" என்று அழைக்கப்படுபவர்களைத் தொடர்ந்து ஏளனம் செய்கின்றன. சமீபத்தில், ஒரு செய்தி

*நிகழ்ச்சி, கிறிஸ்துவின் சபைகளை "பிரிவினைக்கூட்டம்" என்று குறிப்பிட்டது.* [16]Foxe, *9.* [17]*1 கொரிந்தியர் 4:12ல் பவுல் தம்மைப் பற்றியே பேசினார், ஆனால் வேறொரு இடத்தில் அவர் தமது வாசகர்களுக்கு, தாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போன்று அவர்கள் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார் (1 கொரிந்தியர் 11:1).* [18]*முன்பே குறிப்பிட்டபடி, துன்புறுத்தப்படுதல் என்பது சீஷத்துவத்திற்கு நிரூபணமாக அல்ல, ஆனால் அதன் விளைவாக உள்ளது. அதனால்தான் நான் இந்தப் பகுதியில் பின்வரும் தகுதிப்படுத்தும் சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறேன்: "சுட்டிக்காட்ட முடியும்," "வெளிப்படுத்தலாம்."* [19]KJV *வேதாகமத்தில் "துன்புறுத்தப்பட்டிருப்பவர்கள்" என்றுள்ளது. கிரேக்க வசனம் முற்று வினைச்சொல்லைப் பயன்படுத்துகிறது, இது கடந்த காலத்தில் தொடங்கப்பட்ட ஒரு செயல் நிகழ்காலத்திலும் தொடர்வதைச் சுட்டிக்காண்பிக்கிறது.* [20]McCord, 58.